Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (13-2-66) இதழ் 5

மாசி 2 ஷவ்வால் பிறை 14 ஞாயிற்றுக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

உழைப்போர்க்கு உற்சாகமளிப்பது

முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

முல்லா பீடி கம்பனி

கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம்.

## திருச்சிக்கு விமான சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைக்கும் திருச்சிக்கும் இம்மாதம் 15-ம் திகதியிலிருந்து வாரத்துக்கு ஐந்து நாட்கள் விமான சேவை ஆரம்பிக்கப்படுகிறது. சனிக்கிழமையிலும் வியாழக்கிழமையிலும் தவிர இதரநாட்களில் இங்கிருந்து திருச்சிக்கு இனிப் பிரயாணம் செய்யலாம்.

# வருமான விபரம் — வெளியிடாவிடில் கடும் தண்டனை!

## வரிமன்னிப்பு அவகாசம் பெப். 18-ந் திகதி முடிவடையும்

பம்பலப்பிட்டி, சனி

தங்கள் வருவாய் குறித்து விபரம் தெரிவிக்காமல் இன்னும் பலர் ஒளித்துக்கொண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. வருமானவரிக்கு அஞ்சி பெருஞ் செல்வந்தர்கள் பலரும் இவ்விதம் தங்கள் வருவாய் விபரங்களை வெளியிடாதிருக்கின்றனர் என்பதுபற்றி உள்நாட்டு இறைவரி இலாகாவுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து அரசாங்கம் அளித்த காலவரையறைக்குள் தங்கள் வருவாய்பற்றி தகவல் கொடுக்காதவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தங்கள் வருவாய் பற்றி அரசாங்கத்துக்கு தெரிவிக்க இம்மாதம் 18-ந் திகதி வரை வரி மன்னிப்பு அளிக்கப்பட்டிருந்தபோதிலும் மதிப்பிட்டபடி பலர் தங்கள் சொத்து, வருவாய் விபரங்களை இன்னும் வெளியிடவில்லையாம்.

1965-ம் ஆண்டு இயற்றப்பட்ட 18-ம் இலக்க உள்நாட்டு இறைவரித் திருத்தச்சட்டம் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அமுலுக்கு வந்ததாயினும் 1965—66 ஆண்டிற்கும், அதற்கு முந்திய ஆண்டுகளுக்கும் வரி மன்னிப்பு அவகாசம் கொடுக்கப்பட்டது. அவகாசகால எல்லைக்குள் 72 பேர் மட்டும் 2 கோடி 10 லட்சம் ரூபாவை மட்டும் வெளிப்படுத்தினர். இதனால் தங்கள் சொத்து விபரங்களை வெளியிட மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க இம்மாதம் 18-ந் திகதிவரை காலவரையறை நீடிக்கப்பட்டது. முன்னரைவிடக்கூடுதலான தொகை வெளிப்படுத்தப்பட்டதாயினும் பெரும்பாலானோர் தங்கள் சொத்து விபரத்தை இன்னும் வெளியிடவில்லையென மதிப்பிடப்படுகிறது.

காலவரையறை முடிந்தபின், கள்ளத்தனமாகப் பணத்தை முடக்கி வைத்திருப்போர் கண்டுபிடிக்கப்பட்டால் சிறைத் தண்டனை உட்பட கடும் தண்டனை விதிக்கப்படுமென அரசாங்கம் எச்சரித்துள்ளது.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது

டொலர் மார்க்

அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்

14 டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:

அலுமினிய தொழிற்சாலை

மாவிட்டபுரம்

## கண்டியில் பர்மியத் தலைவர்

பம்பலப்பிட்டி, சனி

பர்மியத் தலைவர் நீவின் இன்று கொழும்பிலிருந்து கண்டி வந்துசேர்ந்தார்.

பிற்பகல் தலதா மாளிகையில் விசேட அஞ்சலியில் நீவினும், அவரது பரிவாரங்களும் கலந்துகொண்டனர்.

ஜெனரல் நீவின், நுரலை, அனுராதபுரம், கல்ஓயா ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்துவிட்டு வருகிற செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்புவார்.

புதன்கிழமை அவர் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவார்.

## 15,000 பேருக்கு வீடு

பம்பலப்பிட்டி, சனி

கொழும்பில் கிடைக்கக்கூடிய காணிகளில் சுமார் 15,000 பேருக்கு வீடுகள் கட்டித்தரும் விரிவான புனர் அபிவிருத்தித்திட்டமொன்றை உதவி ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு ஆர். பிரேமதாசா கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும்கிடைக்கக்கூடிய காணிகளை எடுத்து அதை உபயோகிப்பது சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட மந்திரிசபை உபகமிட்டியிடம் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

இந்த உபகமிட்டியில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா, ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. திருச்செல்வம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

உத்தேச திட்டத்தின்படி சுமார் நாற்பது ஏக்கரில் கட்டப்படவிருக்கும் இந்த வீடுகளில் சகலவித வருமானமுள்ளவரும் வசிப்பதற்கு வசதியளிக்கப்படும். தற்போது சேரிகளில் வாழ்பவருக்கே இந்த வீடுகளில் வசிப்பதற்கு வசதியளிக்கப்படுமெனத் தெரிகிறது.

## தலைமை உரை தமிழ் உரை

நேருநகர், பெப். 12

ஜெய்ப்பூர் 70-வது காங்கிரஸ் மகாநாட்டில், காங்கிரஸ் தலைவர் திரு காமராஜ் இன்று தமிழில் தலைமை உரையை நிகழ்த்தினார். 40 நிமிடம் அவர் பேசிய பேச்சுக்களை திரு. சுப்பராவ் ஹிந்தியில் மொழி பெயர்த்தார்.

## உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க 5 வருடத்திட்டம்

பம்பலப்பிட்டி, சனி

இலங்கையில் உள்நாட்டு உற்பத்தியைத் தீவிரமாக்குவதற்கு ஐந்து வருட நகல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டு முதல் 1970-ம் ஆண்டுவரையான ஐந்து வருட காலத்தில் தேயிலையின் வருட உற்பத்தியை 9 கோடி றாத்தலாக உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக உணவு விவசாய அமைச்சு நேற்று விடுத்துள்ள "இலங்கை விவசாய அபிவிருத்திக்கான ஐந்து வருட நகல் திட்டத்தில்" பல விபரங்கள்வெளியிடப்பட்டுள்ளன.

நெல் உற்பத்தியை வருடமொன்றுக்கு 5 கோடி புசலிலிருந்து 1970-ல் 7 கோடி புசலுக்கு உயர்த்துவதும் இத்திட்டத்தில் ஒன்றாகும். இதுதவிர ரப்பர், தேங்காய் உபஉணவுப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

1970-ம் ஆண்டில் இந்த நாட்டுக்குப் போதுமான செத்தல் மிளகாயும், ஈர வெங்காயமும் தாராளமாக உற்பத்திசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சோஷலிசத்தை ஸ்திரப்படுத்த எல்லோரும் உழைக்கவேண்டும்

### காங்கிரஸ தலைவர் காமராஜர் வேண்டுகோள்

ஜெயப்பூர், பெப். 12

கட்சியின் சோஷலிசக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் அரும் பாடுபட்டு உழைக்க வேண்டும் என இன்று நடைபெற்றஅகில இந்தியக் காங்கிரஸ் பொது மகாநாட்டில் தலைமையுரை நிகழ்த்துகையில் திரு. காமராஜர் கேட்டுக்கொண்டார். உண்மையான சோஷலிசம் நிலைக்க அங்கத்தவர்கள் சரியான மாதிரி தங்களைக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிக்கவேண்டும் எனவும் திரு. காமராஜர் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி தனதுஉரையில் கட்சி இதுவரை கடைப்பிடித்துவந்த கொள்கையையேஇனியும் கைப்பிடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்

திருமதி இந்திராகாந்தி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

நாட்டின் முன்னைய தலைவர்கள் கடைப்பிடித்துவந்த கொள்கைகள் சரியானவை என்பது இப்பொழுது நிரூபணமாகிவிட்டன. இந்தக் கொள்கைகளின்வழி நின்று நாட்டை வளம்படச் செய்வதேஎங்கள் கடமையாகும். இதற்கு அதிகமான மக்க

6-ம் பக்கம் பார்க்க)

## ஜி. ஜி. க்கு திருமலையில் மகத்தான வரவேற்பு

### கட்சி பேதமின்றி மக்கள் அளித்தனர்

திருக்கோணமலை, சனி

ஐ. நா. மகாசபையில் இலங்கையின் தலைமைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு உலகப் பிரச்னைகள் பலவற்றில் உருவான யோசனைகளைத் தெரிவித்து இலங்கையின் புகழை உயர்த்தியதற்காக, யாழ்ப்பாணம் எம். பி.யும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு திருக்கோணமலை மக்கள், கட்சிப் பற்றற்ற முறையிலும், இன மத பேதமின்றியும் இன்று உற்சாகமான வரவேற்பளித்தனர்.

திரு. பொன்னம்பலம் கொழும்பிலிருந்து இன்று காலை ஒன்பதேகால்மணிக்கு சீனன்வாடி விமானநிலையத்தில், விமானத்தில் சென்று இறங்கியதும் அங்கு, தமிழ

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உடலை சவர்க்காரம் சுத்தப்படுத்துவதுபோல் நம் மனமாசுகளை, நாமஜபம், தியானம், கீர்த்தனம், வழிபாடு முதலியன அகற்றி மனதைச் சுத்தப்படுத்துகின்றன. —சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone ...

ஈழ... விசுவாவசு ஆண்டு மாசி 2உ (13-2-66)

# சர்வகலாசாலைக் கமிஷன் சிபார்சுகள்

பேராதனைச் சர்வகலாசாலையில் டிசம்பர் மாதம் 7-ந் திகதி நடந்த கலவரம்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட தனி நபர் கமிஷினர் திரு. என். டி. எஸ் விஜயசேகரா தமது அறிக்கையில் நான்கு முக்கிய சிபார்சுகளைத் தெரிவித்திருக்கிருர். இவை மீது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைஎடுத்து விரைவில் சர்வகலாசாலையை மீண்டும்திறக்க வேண்டும். அரசாங்கம் மட்டுமல்ல சர்வகலாசாலை உபஅத்யட்சகரும் பேராசிரியர்கள், மாணவர்களும்கூட, இந்தச் சிபார்சுகளை நடுநிலைமையில் நின்று கணித்துதமது குறைபாடுகளையும் திருத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

அரசியலில் தீவிர பங்கு கொண்டுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் சர்வகலாசாலையில் இருக்கக்கூடாது; உபஅத்யட்சகரின் பதவிக்காலம் ஐந்து வருடங்களுக்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்; சர்வகலாசாலையில் இடநெருக்கடி தவிர்க்கப்பட வேண்டும்; விடுதியில் தங்கியிருக்காத மாணவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென ஒரு குழுவை நியமிக்க வேண்டும் என்பவைதான் திரு. விஜயசேகரா தெரிவித்துள்ள நான்கு முக்கிய சிபார்சுகளாகும்.

இளம் உள்ளங்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவது மிகச் சுலபம். மாணவர்கள் அரசியலை அறிந்திருக்க வேண்டும்; ஆனால் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று பலர் பல தடவைகளிலும் கூறியிருப்பினும் அரசியல் வாதிகள் இளைஞர்களையே தமது கட்சிகளின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த விரும்புகிருர்கள். இது சுலபமும்கூட. இலங்கையில் அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் இளைஞர்களையே தமது வளர்ச்சிக்காகப் பயன்படுத்துகின்றன. பாடசாலைகளிலும் சர்வகலாசாலைகளிலும் அரசியல்தீவிரமாக நுழைந்துள்ளதுதான் மாணவர் சமுதாயத்தின் பல கேடுகளுக்குக் காரணமெனலாம். வெளி வெளியாக அரசியல் கட்சிகளில் அங்கம் வகிப்போர் சர்வகலாசாலைகளில் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் இருக்கும் போது சர்வகலாசாலை மாணவர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பது சுலபமல்ல. எனவே தீவிரமாக அரசியலில் பங்கு கொண்டுள்ளவர்கள் உடனடியாக அரசியலிலிருந்து விலகிவிட வேண்டும். இல்லையேல் ஆசிரியத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு அரசியலில் ஈடுபட வேண்டும். இதை அவர்கள் தாமாகச் செய்வது நல்லது. இல்லையேல் திரு. விஜயசேகரா சிபார்சு செய்திருப்பதுபோ.. அவர்களுக்குச் சர்வகலாசாலையில் இடமளிக்கக்கூடாது.

உப அத்யட்சககராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஐந்து வருடங்களுக்கே பதவி வகிக்க வேண்டுமென்பது வரவேற்க வேண்டிய சிபார்சு. பலநாடுகளிலும் இதுபின்பற்றப்படுகிறது. ஒருவர் பலகாலம் இப்பதவியிலிருப்பதால்அவர் விருப்பு வெறுப்புகளுக்கு உள்ளாகி சர்வகலாசாலை நிர்வாகமே சீர்குலைந்துவிட ஏதுவாகும். பேராதனைச் சர்வகலாசாலையில் அத்யட்சகருக்கு ஆதரவான கோஷ்டியும் எதிரான கோஷ்டியும்இருப்பதென்பது உண்மையென திரு. விஜயசேகரா தமது அறிக்கையில் கூறியிருப்பபதே இதற்குப் போதிய சான்று. எனவே இப்போதைய உப அத்யட்சகர் இந்தச் சிபார்சை ஏற்று தாமாகப் பதவியிலிருந்து விலகிவிடுவது அவருக்கும் நல்லது, சர்வகலாசாலையின் சீர்திருத்தத்துக்கும் நல்லது.

சர்வ கலாசாலை இடநெருக்கடி பற்றி நாம் பல தடவைகளிலும் இப்பத்தியில் குறிப்பிட்டிருக்கிரும் நேற்றும்கூட இப்பத்தியில் இடநெருக்கடிக்குவிரைவில் தீர்வுகாண வேண்டுமென்றும் முன்னர் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகளையொட்டி யாழ்ப்பாணத்திலும் ஒரு சர்வகலாசாலையோ, சர்வகலாசாலைப் பிரிவோ அமைப்பதன் மூலம் இப்பிரச்னைக்கு ஓரளவு தீர்வு காண முடியுமென்றும் குறிப்பிட்டிருந்தோம். இன்றும் இதையே வலியுறுத்திக்கூறவிரும்புகின்றும். இவ்விஷயத்தில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நமது பார்லிமெண்ட் பிரதிநிதிகளும் கல்விமான்களும் துரிதமாகச்செயலாற்றவேண்டும்.

வெளிமாணவர்களின் நலன்களைக் கவனிக்க ஒரு குழு நியமிக்கவேண்டுமென்ற சிபார்சும் மாணவர்களுக்கு மட்டுமல்ல சர்வகலாசாலையின்சிறந்த நிர்வாகத்துக்கும் ஏற்றதாகும்.

கமிஷனரின் அறிக்கையையும்சிபார்சுகளையும்உடனடியாக அரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசிய காரியமாகும். இப்பிரச்னைகளுக்கு தற்காலிகத் தீர்வு காண்பது நிலைமையை மேம்படுத்தாது. தற்காலிகநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் நிரந்தரத்தீர்வுக்கானநடவடிக்கைகளையும் உடனடியாகவே மேற்கொள்ளவேண்டும். இதே சமயம் நமது நாட்டிற்குத் தேவையான கல்வித்திட்டத்தை இனியும் தாமதியாது உருவாக்கவேண்டியதும் அவசியமாகும்.

# சிறுபான்மைத் தமிழரின் சிங்கள-தமிழ் பௌத்தபாடசாலை

## சாதி வித்தியாசத்தை ஒழிக்க வஜிரராமதேரோ யோசனை

உடுப்பிட்டி, சனி

'இன்று இப்பகுதியில் முதன்முதலாகத் தமிழ்-சிங்கள பௌத்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய மிக முக்கியமான தினமாகும். இங்குள்ள தமிழ் மக்கள் புத்தரின் பஞ்சசீலக் கொள்கைகளை ஏற்று அவரது வழிகளைப் பின்பற்ற விரும்புவதாக அறிந்தேன். சிங்கள மதத்தை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று நான் கட்டாயப்படுத்தவில்லை, ஆனால் சிறுபான்மைத் தமிழ்மக்கள் எவ்விதத்திலும் முன்னேற வேண்டுமென்பதே எமது விருப்பம் டாக்டர் அம்பேத்கார் மகாத்மா காந்தி முதலிய பெரியார்கள் ஹரிஜனங்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு உயர்ந்தார்கள். அவர்களை நாடுவெறுக்கவில்லை. டாக்டர் அம்பேத்கார் மதமாற்றம் செய்துதான் முனனேற்றம் கண்டார். பௌத்தம் உங்களுக்குச் சகல வழிகளையும் காட்டி உங்கள் முன்னேற்றத்திற்கு உதவிபுரியும். நம்மிடையேயும் சாதிபேதங்கள் இருக்கத்தான் செய்தன. சில தாழ்த்தப்பட்ட இனமக்கள் சட்டைபோடுவதும் குடைபிடிப்பதும் செருப்புகள் அணிவதும் வீட்டுக்கு ஓடு போடுவதும் சில பெரியசாதி மக்களால் தடைசெய்யப்பட்டிருந்தது. நாங்கள் எமது சேவையால் அவற்றைஒழித்துள்ளோம்''

இவ்வாறு பம்பலப்பிட்டி வண. வஜிராமநாத மகாதேரோ கரவெட்டி மேற்கு தமிழ் பௌத்தர்களால் மூவாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தமிழ்-சிங்கள பௌத்த பாடசாலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினுர்.

இவ் வைபவத்திற்கு அகில இலங்கைத்தமிழர் பௌத்த சங்கத்தலைவர் திரு வி. வைரமுத்து தலைமை வகித்தார் வண. வஜிர ராமநாத மகாதேரோ தொடர்ந்து கூறியதாவது:—

நாம் படிபடியாக முன்னேறவேண்டும். அதற்கு நல்ல தலைவர்கள் தேவை. தூய உள்ளத்துடன் தொண்டுசெய்யக் கூடியவர்கள் வேண்டும். நான் இந்த பாடசாலையைத் திறந்துவைக்கவரமுன்னர்ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவிடம் இதுபற்றித் தொலைபேசியில் கேட்டேன். ஏதேனும் அசம்பாவிதங்கள் அல்லது எதிர்ப்புகள் எழக்கூடுமா என்று கேட்டேன். அதற்கு அவர் இவ்விஷயத்தில் எதற்கும் எதிர்ப்புக்காட்ட மாட்டார்களென்றும் தாராளமாகவும்கட்டாயமாகவும்என்னை இங்கு போகும்படியும் கூறினுா இப்பகுதி(உடுப்பிட்டி) பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு சிவசிதம்பரமும் என்னைச் சந்தித்தார். அவரிடம் இதுபற்றி விசாரித்தபோது அவரும் தன்னுலியன்ற உதவிகளைச் செய்வதாகக் கூறினுர். நான் அவரிடம் இங்கு வாழும் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து பெற்றுத்தரக்கூடிய சலுகைகள் அத்தனையையும் பெற்றுக் கொடுக்கும்படி கூறினேன். 200 க்கு மேற்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இப்பகுதியில் இருப்பதாக அறிந்தேன். அவர்களின் உதவியால் இப்பகுதிப் பிள்ளைகள்வெகுஇலகுவாக முன்னேறலாம்.

இப்பாடசாலையை [illegible] நானும் பொறுப்பேற்பதற்கு ஆவனசெய்வேன் இதேபோன்று பல பாடசாலைகளைப் பல்வேறு பகுதிகளிலும் அமைத்தால் அரசாங்கத்தின் உதவி கட்டாயம் அவற்றுக்குக் கிடைக்கும்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரைப் பிரதான குரு பேசுகையில் பௌத்த மதத்தைப் பின்பற்றும் தமிழ்மக்கள் வாழும்பகுதிகளில் சிறு சிறு விகாரைகளை உண்டாக்கவேண்டியது அவசியமென்றும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு போதும் சாதிவேறுபாடு காட்டமாட்டார்கள் என்றும் கூறினுர்.

யாழ்ப்பாண சிங்கள மகா வித்தியாலய அதிபர் திரு. ஜெயதிலகா பேசுகையில் சாதிவேற்றுமையை ஒழிப்பதற்கு ஒரேவழி புத்தசமயம்தான் என்ருர். இப்பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சிங்களப் புத்தகங்களை நான் அன்பளிப்பாக வழங்குவேன் என்றும் அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ஹெபேர்ட் சில்வா பேசுகையில் புத்தர் பிரானின் தூயமதம் இப்பகுதியில் பரவுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைவதாகக் கூறினுர்.

திரு. வி. மாணிக்கம், திரு. டேவிட், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வை. டி. செனரத், யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. கே. இடமல்கொட ஆகியோரும் பேசினர். திரு க. நாகமுத்து வரவேற்புரை வழங்கினுர். திரு. இராசரத்தினம் நன்றிகூறினுர்.

# 'பாடசாலைகளுக்கு சுதந்திரம் அவசியம்'

பம்பலப்பிட்டி, சனி

'பாடசாலைகளுக்குமேலும் சுதந்திரம் இருக்கவேண்டும் முக்கியமாக அரசாங்க பாடசாலைகளுக்கு இது அவசியம். தமது சுதந்திரவழியில் வாழ அவர்களுக்கு வாய்ப்பு இருக்கவேண்டும். இந்த வேலைக்கோ, அந்த வேலைக்கோ மாணவர்களைத் தயார்படுத்துவதோடு நின்றுவிடாது எந்த சூழ்நிலையிலும் அதற்கேற்றபடி வாழ்வதற்கு அவர்களைத் தயார் படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு இந்த சுதந்திரம் வாழ்வளிப்பதாக இருக்கும்.''

இவ்வாறு கண்டி டிறினிட்டி கல்லூரி அதிபர் திரு. சி ஜே. ஊர்லோப் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவின்போதுபேசுகையில் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் திரு. எம். சி சன்சோனி இவ்வைபவத்துக்கு தலைமைதாங்கினுர். திருமதி சன்சோனி பரிசுகளை வழங்கினுர்.

# இதுவும் ஒரு கைத்தொழில்!

பாணந்துறை, சனி

மொராவின்ன, திப்பெடா, கலுருவா, மகாவில்ல ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி ஒரு குடிசைக் கைத்தொழிலாக நடத்தப்பட்டு வருவதாக் அறியப்படுகிறது.

இதைத் தடுப்பதற்குஇன்னும் போதியநடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென இங்குள்ள மக்கள் குறை தெரிவித்துள்ளனர்.

# ஐயாறன் எழுதுவது

புதுடில்லியில்நடைபெற்ற ''இந்து மகாநாட்டு''க்கு மலாயாவின் பிரதிநிதியாகச் சென்றிருந்த சுவாமி பிரணவானந்தா அவர்கள் இந்தியாவிலே பல இடங்களுக்கும் சென்றுவிட்டு இப்போது யாழ்ப்பாணம் வந்திருக்கிருர்கள். நம் அளவெட்டி தந்த சுவாமி அவர்களைப்பற்றி ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். மலாயாசென்று பெரிய உத்தியோகம் வகித்த சுவாமி சிவானந்தரிடம் சுஷிரயம் பெற்று, மலாயாவிலே திவ்ய ஜீவன சங்கமமைத்து அரிய தொண்டாற்றுவதுடன், மலாயா, இலங்கை, இந்தியா இம்மூன்று நாடுகளுக்கும் ஓர் ஆத்மீக உயிர்ப்பாலமாக இருப்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். சரியாக ஒரு வருஷம் கழித்து அவர் ஈழம் வந்திருக்கிருர்.

இந்தியாவில் இந்து சமூக நிலை என்ன என்று கேட்டேன். இந்தியா சுதந்தரமடைந்தபின் அங்கு இந்துக்களின் எண்ணிக்கை நூற்றுக்கு சுமார் ஒன்றுவீதம் குறைந்துள்ளதாயும் முக்கிய காரணம் அவர்கள் மதம் மாறியுள்ளதுதான் என்றும் மகாநாட்டில் கூறப்பட்டதாம்.

* * *

இந்த மதமாற்றத்துக்கு என்ன காரணம்? அநேகமாக சமூகக் குறைபாடுகளும், பொருளாதார கஷ்டங்களும் தான் என்றும், இதற்கு பிறசமயத்தவரைக் குறைகூறப்படாதென்றும் சொன்னுர். இந்துக்கள் மதவிஷயத்தில் வெறும் பேச்சும் பூச்சுமாக உள்ளனரேயன்றி, சமூகத்தில் யாரும் பட்டினி முதலியவற்ருல் அவதிப்பட்டால், ''அது அவர்கள் செய்த கர்மபலன். வினையை அனுபவிக்க வேண்டியதுதான்'' என்று கருணையற்ற வேதாந்தம் பேசுவதாகவும் இடித்துச் சொன்னுர்.

இதைக்கேட்டதும் ஒரு பழைய கதை ஞாபகம் வருகிறது. ஒரு செல்வந்தர் பதி, பசு, பாசம் முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களை நன்கு படித்தவர். திருக்குறள் எல்லாம் மனப்பாடம். சமூகத்திலுள்ள ஏழ்மையைப் பற்றிப் பேச்சு வந்தது. ''மேலைத் தவத்தளவே யாகுமாம் தாம் பெற்ற செல்வம்'' என்றும் ஏழை பணக்காரன் என்பது பூர்வ ஜன்மகர்மவினையின் பயன்தான் என்றும் திருக்குறளை மேற்கோளாகச் சொன்னுர்.


எனக்கு மற்ருேர் குறள் ஞாபகம் வந்தது. ''இரந்தும்உயிர்வாழவேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்'' அதாவது பிச்சை எடுத்துத்தான் ஒருவர்உயிர் வாழவேண்டுமென்ற நிலை ஒரு சமூகத்தில் இருப்பின், இந்த உலகத்தைச் சிருஷ்டித்த கடவுளே ஒழியட்டும் என்று அவ்வளவு உணர்ச்சியுடன் வள்ளுவனுர் கூறியிருப்பதை எடுத்துச் சொன்னேன். அவர் பதில் ஒன்றும் பேசவில்லை.

கர்மவினை சட்டப்படியே பார்ப்போம். இன்று ஏன் சிலர் பட்டினி முதலியவற்ருல் அவதிப்படுகிருர்கள்? மார்க்ஸீயவாதிகள், சுயநலச் சுரண்டல்களைக் காரணம் கூறலாம். ஆனுல் கர்மவினைச்சட்டப்படியே பார்த்தால், போன ஜன்மத்தில் தானதர்மங்கள் செய்தவர் இந்த ஜன்மத்தில் செல்வந்தர்களாகப் பிறந்திருக்கலாம். இப்போது தானதர்மங்கள் செய்யாமல், பிறரைச் சுரண்டி ஜீவிக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 900 வயது தேவாலயம்



உலகப் பிரசித்திபெற்ற வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயம் 900 ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டனில் தோன்றிய தாய்த்தேவாலயம் பிரிட்டன் சரித்திரத்தையேகூறும் அளவுக்கு இன்று எல்லா வகைகளிலும் உயர்ந்துநிற்கும் இத்தேவாலயத்தின் 900 ஆண்டுபூர்த்தி விழா கடந்த டிசம்பர் மாதம் 28-ந் திகதி முதல் கொண்டாட படடு வருகிறது. இவ்வருடம் முழுவதும் கொண்டாட்டம் நடைபெறும் தேவாலயத்தின் கம்பீரமான முன்புறத் தோற்றத்தைப் படத்தில் காணலாம்.

# 10 கோடி மக்கள் உணவுபிரச்னையில் பாதிக்கப்பட்டுள்ளனர்

## இந்தியாவுக்கு 140 லட்சம் டன் உணவுப் பொருள் தேவை

ஜெய்ப்பூர், பெப். 12

பாரத தேசியக் காங்கிரஸ் 70-வது மகாநாட்டின் முழுக்கூட்டம் இன்று காலை ஜெய்ப்பூரில் ஆரம்பமானது.

உணவு சம்பந்தமான விவாதத்துக்கு மந்திரி சுப்ரமண்யம் நேற்றுப் பதிலளிக்கையில், ஒரு தற்காலிமான ஏற்பாடாகவே உணவுமண்டலம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இது பயனற்றது எனத் தரிந்தவுடன் நிறுத்தப்படும் என்றும் கூறினார்.

### 140 லட்சம் டன் தேவை

ஐ. நா. உணவு விவசாய டைரக்டர் திரு. பி. ஆர். சென் நேற்று டில்லி ரேடியோவில் பேசியபோது இந்தியாவுக்கு 110 லட்சம் டன் முதல் 140 லட்சம் டன்வரை உணவுப்பொருட்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்தார். யுதாண்டும் தாமும் விடுத்த கூட்டு வேண்டுகோளை அவர் வானொலியில் கூறினார்.

உணவுப் பிரச்னையில் 10 கோடி மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும் 2 கோடி குழந்தைகள் ஆபத்தான நிலையில் இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

### இந்திராகாந்தி

பிரதமமந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி நேற்று மாதர் கூட்டமொன்றில் பேசிய போது உணவுப் பிரச்னை ஒரு அரசியல் பிரச்னை அல்ல என்றார். அது ஒரு தேசியப் பிரச்னை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 18 ஆண்டுகளில் இந்தியாவின் சாதனையை எந்த நாடும், எச்சமயத்திலும் சாதித்ததில்லையென்றும் அவர் கூறினார்.

"இந்தியா 3 அன்னிய ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாயிற்று. அதேசமயத்தில் அதன் பொருளாதார சாதனைகளும் மகத்தானவை" என்றார் இந்திரா.

### அமெரிக்கா வரவேற்பு

இந்தியாவுக்கு உதவிபுரியுமாறு யுதாண்ட் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா வரவேற்றிருக்கிறது. "இந்தியாவின் பிரச்னை ஒரு உலகப் பிரச்னை" என ஐ. நா. விலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க் கூறினார்.

# வேலைநிறுத்தம் தவிர்க்கப்பட்டது

லண்டன், பெப். 12

பிரிட்டனில் நடைபெறவிருந்த பெரிய ரயில்வே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

பிரதம மந்திரி திரு. வில்சன் யூனியன் தலைவர்களுடன் தொடர்ச்சியாக 15 மணிநேரம் பேச்சுநடத்திய பின் இந்த முடிவு ஏற்பட்டது.

இதுசம்பந்தமாக யூனியனில் நடைபெற்ற வாக்கெடுப்பில் 13 பேர் சாதகமாகவும், 10 பேர் பாதமகாகவும் வாக்களித்தனர். ரயில்வே ஊழியர்களுக்கு மூன்றரைவிகிதச் சம்பளஉயர்வு வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

# மார்ச் மாதம் யு. எஸ். செல்வார்

வாஷிங்டன், பெப். 12

ஸ்ரீமதி இந்திராகாந்தி இயன்றவரை விரைவில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருப்பதாய் ஜனாதிபதி ஜோன்ஸன் நிருபர்களிடம் அறிவித்தார்.

ஸ்ரீமதி இந்திராகாந்தியிடமிருந்து தமக்கு இவ்விஷயமாகக் கடிதம் கிடைத்திருப்பதாயும், மார்ச் மாத பிற்பகுதியில் அவர் வரக்கூடும் என்றும் திரு. ஜோன்ஸன் தெரிவித்தார்.

# ஹம்ப்ரி டில்லி வருகிறார்

புதுடில்லி, பெப். 12

அமெரிக்க உதவி ஜனாதிபதி ஹம்ப்ரி வருகிற புதன்கிழமை புதுடில்லி வருவார் என அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி, பிரதமர், வெளிமந்திரி ஆகியோருடன் அவர் வியட்னும் பிரச்னை பற்றியும், பொருளாதார, உணவுப்பிரச்னை பற்றியும் பேச்சு நடத்துவார்.

# உண்ணுவிரதம் முடித்தனர்

லக்னோ, பெப். 12

தங்களுக்குக் குடும்ப அலவன்ஸ் தரவேண்டும் என்றும், சிறையில் வசதி செய்து தரப்படவேண்டும் என்றும் கோரி உண்ணுவிரதமிருந்த 60 உத்தரபிரதேச இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தங்கள் உண்ணுவிரதத்தை முடித்துக்கொண்டனர்.

# கேரளம்

திருவனந்தபுரம், பெப். 12

இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கோவிந்தன் நாயர் தனது உண்ணுவிரதத்தை நேற்று முடித்துக் கொண்டார்.

நேற்று கேரளத்தில் 100 மாணவர்கள் உண்ணுவிரதம் மேற்கொண்டனர்.

200 பேர் கைது செய்யப்பட்டனர்.

# பிரிட்டன் ஆயுதம் அனுப்பும்

லண்டன், பெப். 12

இம்மாதம் 25-ந் திகதி இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே படைவிலக்கம் பூர்த்தியானல், பிரிட்டன் இரு நாடுகளுக்கும் ஆயுத சட்டுகளைத் தொடர்ந்து அனுப்புவது பற்றி ஆலோசிக்கும் என அறிவிக்கப்பட்டது.

# டொமினிக்கனில் நெருக்கடி

சாந்தாடொமிங்கோ, பெப். 12

சாந்தா டொமிங்கோவில் நேற்றைய கைகலப்பின் போது 5 பேர் கொல்லப்பட்டனர். கடந்த இரு தினங்களில் மொத்தம் 12 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நிலைமை அங்கு நெருக்கடியாக இருப்பதாய் ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் கூறியிருக்கிறார். பொதுவேலைநிறுத்தம் பரவியிருக்கிறது.

# பிரிட்டிஷ் மகாராணி

சென்ஜார்ஜ்ஸ், பெப். 12

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தும், அவரது கணவரும் தங்கள் கரீபிய சுற்றுப்பிரயாண மத்தியில் கிரனேடாவுக்கு வந்துசேர்ந்தனர்.

# புதிய ரயில்பாதை

ஸாலிஸ்பரி, பெப். 12

தென்னாபிரிக்க எல்லைக்குப் புதிய ரயில்பாதை ஒன்றைப்போட றொடீஷியா ஆலோசித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது. தற்போதைய ரயில்பாதை பிரிட்டிஷ் பராமரிப்புப் பிரதேசமான பெச்சுவானாலந்து வழியாகச் செல்கிறது.

**பிரான்ஸில்**

# மரணதண்டனை ஒழிப்பு மசோதா

பாரிஸ், பெப். 12

பிரான்ஸில் மரணதண்டனையைஒழிக்கும் மசோதா ஒன்று பிரெஞ்சு தேசிய சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

# கெய்ரோவில் ஈராக் அதிபர்

கெய்ரோ, பெப். 12

ஈராக் ஜனாதிபதி அரீப், இன்று கெய்ரோவுக்கு விஜயஞ்செய்தார்.

# உபதேர்தல்கள்

புதுடில்லி, பெப். 12

1962ம் ஆண்டுத் தேர்தலுக்குப்பின் லோகசபைக்கு 27 உபதேர்தல்களும், ராஜ்யசபைக்கு 108 உபதேர்தல்களும் நடைபெற்றன. (பி. டி. ஐ.)

# 2 லட்சம் டன் தாய்லாந்து அரிசி

பாங்கக், பெப். 12

தாய்லாந்திலிருந்து 2 லட்சம் டன் அரிசி வாங்கும் பொருட்டு இந்திய உயர் அதிகாரி ஒருவர் இங்கு வந்திருக்கிறார்.

# வருணபகவான் இரங்கினார்

நேருநகர், பெப். 12

இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள கொடிய வரட்சியால் கவலையடைந்துள்ள காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு இன்று மகிழ்ச்சிகரமான ஆச்சரிய சம்பவம் ஒன்று ஏற்பட்டது.

மகாநாட்டுப் பந்தலுக்குள் உணவு விவாதம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மழைபெய்ய ஆரம்பித்தது. பிரதிநிதிகளின் பேச்சுக்களைக் கேட்ட வருணபகவானுக்கே இரக்கம் வந்துவிட்டதுபோலுமென அவர்கள் வருணித்தார்கள். (பி. டி. ஐ.)

# வடவியட்னும் துருப்புக்கள் லாவோஸில் நுழைந்தன

## யுத்தத்தை விஸ்தரிப்பதாக அமெரிக்கா மீது ரஷ்யா கண்டனம்

நாங்பெங், பெப். 12

ஆயிரக்கணக்கான வடவியட்னும் துருப்புகள் லாவோஸில் நுழைந்திருப்பதாக அந்நாட்டின் பாதுகாப்பு மந்திரி கூறினார்.

தென்வியட்னும்முக்குச் செல்லுமுகமாக அவர்கள் லாவோஸ் வழியாக நுழைந்திருப்பதாய் மேலும் அவர் கூறினார்.

### ரஷ்யா கண்டனம்

அதேசமயம் அமெரிக்கா வியட்னும் யுத்தத்தை இந்தோ சீனாவின் இதரநாடுகளுக்கும் விஸ்தரித்துவருவதாய் ரஷ்யா குற்றம் சாட்டியிருக்கிறது.

### ஜோன்ஸன் அறிக்கை

வாஷிங்டனில் ஜனாதிபதி ஜோன்ஸன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், தென்வியட்னுமிலுள்ள அமெரிக்க படைத் தளபதி கோரும்போது மேலும் அங்கு துருப்புகள் அனுப்பப்படும் என்றும் வியட்னுமிலிருந்து அமெரிக்கா தனது படைகளை ஒருபோதும் வாபஸ் பெருது என்றும் அறிவித்தார். அதேசமயம் வியட்னும் யுத்தத்தை விஸ்தரிக்கவும் தாம் விரும்பவில்லை என்றார் அமெரிக்க ஜனாதிபதி.

### மற்றோர் மகாநாடு

அடுத்த ஜூன், அல்லது ஜூலை மாதம் ஹொனலுலுவில் மற்றோர் மகாநாட்டைத் தாம் கூட்டப் போவதாகவும், தென்வியட்னும் தலைவர்களுடன் பல விஷயங்கள் பற்றி முடிவு செய்யப்போவதாயும் மேலும் அவர் கூறினார்.

# திருடர்களின் 'இரக்கம்'

பாலர்மோ, பெப். 11

வீட்டிலிருந்த குடும்பப் பெண் ஒருவர் இரு திருடர்கள் தமது வீட்டிலுள்ள லிப்டில் ஏதோ ஒரு பார்சலை வைத்துச் சென்றதைக் கண்டு அச்சம்கொண்டு பொலிஸாருக்குப் போன் செய்தார். அவரது வீட்டிலிருந்து அவரது கணவரது கமராக்களையும் பிலிம்களையும் முன்னர் திருடர்கள் சுருட்டிக்கொண்டு சென்றதால் அப்பெண் மிக்க அச்சமடைந்திருந்தார். அத்துடன் ஒருவேளை அந்தப் பார்சல், டைனமைட் கொண்டதாக இருக்குமோ என்ற சந்தேகம் அவரை வியக்கவைத்துவிட்டது. போன் குரல் கேட்டு பொலிஸார் வந்தனர். மிக்க ஜாக்கிரதையாக அந்தப் பார்சலைத் திறந்தார்கள். அந்தப் பெண்ணின் கணவரிடமிருந்து திருடப்பட்ட காமராக்களும் பிலிம்களும் பத்திரமாக இருந்தன. அந்தப் பார்சலுக்குள். அத்துடன் ஒரு துண்டும் அதனுள் இருந்தது துண்டில் இருந்தது இதுதான்: 'மன்னிக்கவும் நாங்கள் தவறு செய்துவிட்டோம்போலிருக்கிறது.'

# இந்தோனேஷியா நிராகரித்தது

ஜாகர்த்தா, பெப். 12

ஜாகர்த்தாவில் சீனத் தூதரகத்துக்கு முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை எதிர்த்து, சீனு தெரிவித்த ஆட்சேபத்தை இந்தோனேஷியா நிராகரித்துவிட்டது.

டாக்டர் சுபந்திரியோ இதுபற்றிப் பேசுகையில் சீனு தங்கள் உள்நாட்டு விஷயத்தில் தலையிடக்கூடாது என்று கூறினார். தூதராலயத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நஷ்டஈடு தரப்படும் என்றும் அவர் கூறினார்.

# டெஸ்ட் கிரிக்கெட்

மெல்போன், பெப். 12

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே மெல்போனில் நடைபெறும் 5-வது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து 6 விக்கட் நஷ்டத்திற்கு 4000 ரன்கள் எடுத்திருந்தது.

# விரலுக்கு பதில் மயிர்

லண்டன், பெப். 12

விரல் அடையாளத்திற்குப்பதில் மனிதமயிர் இனி உபயோகிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. ரேடியோ கதிரியக்கத்தின் மூலம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் இந்தப் புதிய முறை [illegible] படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

## தொழில்நுட்ப கல்லூரிப பரீட்சை

31-1-66 ல் வெளியாகிய ஈழநாடு தினசரியில் ஒருவர் மட்டுமே சித்தி' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியின் 1964-65ம் கழக ஆண்டு தமிழ் சுருக்கெழுத்துப் பரீட்சையில் ஒருவர் மட்டுமே சித்தியடைந்துள்ளார். 1963-64 கழக ஆண்டில் பிட்ஸ்மன் சுப்பிரமணியம் தமிழ் சுருக்கெழுத்து முறைகள் பயிற்றுவிக்கப்பட்டபோது பெருந்தொகையானவர்கள் சித்தியடைந்துள்ளார்களெனவும் இப்போது சுப்பிரமணியம் சுருக்கெழுத்து முறையில் மட்டுமே பரீட்சைநடத்தப் படுவதாலேயே பலர் சித்தியடைய முடியாதிருப்பதாக அகில இலங்கை தமிழ்சுருக்கெழுத்து கலை முன்னேற்ற அபிவிருத்திச் சங்கம் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது'' என்பதுதான் செய்தி

1964—65ம் கழக ஆண்டிற்குரிய இறுதிப்பரீட்சை 1965 மார்ச்மாத இறுதியில் நடைபெற்றது. பரீட்சை நடைபெற்று முடிந்த பல வாரங்களின் பின் தொழில் நுட்பக் கல்வித்திணைக்கழு ஒழுக்கக்குழு மேற்படி பரீட்சையை ரத்துச்செய்துள்ளதெனவும் திரும்பவும்விரைவில் சகல வேகங்களுக்குமான பரீட்சை நடைபெறுமெனவும் அறிவுத்திருந்தது.

இத்தீணக்கண்டு மாணவர் இணைக்கழ ஒழுக்கக் குழு பரீட்சையை நிராகரிக்க வேண்டிய காரணத்தை காட்டவில்லையென்றும், திருப்தியளிக்கக்கூடிய காரணத்தைக் காட்டத் தவறும் பட்சத்தில் தாம் மறு பரீட்சை எதுவும் எழுதப் போவதில்லையெனவும் இணைக்கழத்திற்கு அறிவித்தனர்.

சில மாதங்களின் பின் மாணவரின் கோரிக்கைக்கு எவ்விதமான பதிலும் தராமல் மறு பரீட்சைக்குரிய திகதியை நிர்ணயித்து திணைக்களம் அனுப்பியிருந்தது. உரியகாலத்தில் பரீட்சையையும் நடத்திற்று. ஆனல் மாணவர் பலர் பரீட்சையை பகிஷ்கரித்தனர். எனினும் அன்று நடைபெற்ற பரீட்சையில் 39 மாணவர் தோற்றவேண்டிய ''60 வேகத்திற்''கு ஒரு மாணவரும், 52 மாணவர் தோற்றவேண்டிய ''70 வேகத்திற்கு'' இரு மாணவர்களும் மட்டுமே சமூகமளித்தனர், இவர்களில் ''60 வேகத்திற்கு'' அமர்ந்த மாணவர் மட்டுமே சித்தியடைந்தார்.

''பிட்ஸ்மன்— சுப்பிரமணியம் சுருக்கெழுத்து போதித்தகாலத்தில் பலர் சித்தியடைந்தும் தற்போது சுப்பிரமணியம் சுருக்கெழுத்தில் மட்டுமே பரீட்சை நடைபெறுவதால் தான் பலர் சித்தியடைய முடியாதிருப்பதாயும் வெளியிட்ட அபிப்பிராயம் சரியல்ல எனவே, இனிமேலும் இவ்வாறான முன்னேற்ற அபிவிருத்திச்சங்கங்கள் தவறான அபிப்பிராயங்களை வெளியிடுவது நல்லதல்ல.

வி. பரிபூரணனந்த சர்மா, க. திருச்செல்வ விஜயகமூர்த்தி, சி. துரைராசா, மா. குலசேகரம், ஞா. குணதாஸ்.

## தரமற்ற சாராயத்தால் கண்ணுக்குக் கேடு

கொள்ளுப்பிட்டி, சனி

தற்போது கலால் இலாகாவால் விற்பனைசெய்யப்படும் சாராயம் தரமானதாக இல்லையென்றும் அதிகமானவர்களுக்கு கண்களில் நோய் ஏற்பட இது காரணமாகியுள்ளது என்றும் சுகாதார இலாகவைச்சேர்ந்த பிரப

## யாழ்ப்பாணக்கதைகள் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இலக்கிய வட்டத்தின் வெளியீடான எழுத்தாளர் திரு. கே. வி. நடராசாவின் 'யாழ்ப்பாணக் கதைகள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா வருகிற திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வெளியீட்டுவிழாவில் திரு. நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) வரவேற்புரை நிகழ்த்துவர். யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா விழாவை ஆரம்பித்து வைப்பார். திரு. இ. மகாதேவா வெளியீட்டுரை நிகழ்த்துவார். மாநகரசபை அங்கத்தவர் திரு. என். ரி. செல்லத்துரை முதல் பிரதியை வாங்குவார்.

திருவாளர்கள் க. தி. சம்பந்தன், சைவப்புலவர் சி. வல்லிபுரம், எஸ். பொன்னுத்துரை ஆகியோர் பாராட்டுரை எழங்குவார்கள். இறுதியாக நூலாசிரியர் திரு. கே. வி. நடராஜன் நன்றியுரை கூறுவார்.

## 'இசையைப் பேணுவது எமது கடமை'

கோண்டாவில், சனி

''ஒலிவடிவானவன் இறைவன். இசையின் மகிமையால் நாம் யாரையும் கட்டியாளலாம். மந்த நிலையில் இயங்கி வரும் இசைக்கலை இன்னும் சில ஆண்டுகளில் இசை வாணர்களின் நன்முயற்சியினுல் ஓர் உன்னத நிலைமையடையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. பண்டைக்காலம் தொட்டு இசைக்கலை நம்பரம்பரையினரால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்தமையால் இசைச் செல்வத்தைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.''

இணுவில் தமிழ்மன்றத்தினரால் அங்குரார்ப்பணம் செய்யப்பெற்ற இசை, நடன, கிராமியர் கலைக் கூடத்தின் ஆரம்பவிழாவில் கலந்துகொண்ட மாவை முத்தமிழ் மன்றத் தலைவர் சிவஸ்ரீ அ. சண்முகநாதக் குருக்கள் மேற்கண்டவாறு பேசினார்.

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி திரு ரி.முருகேசம் பிள்ளை பேசுகையில்: பௌத்த, சைவகலாச்சாரங்கள் மரபு வழியால் ஒன்றையொன்று இணைந்தவை. எமது இசைக்கருவிகளில் ஒன்முன மிருதங்கத்தின் உருவ அமைப்பைக் கொண்ட ''பெரா'' என்ற வாத்தியத்தை சிங்கள மக்கள் நடனத்தில் உபயோகிக்கின்றார்கள். மங்கள இசைக்கு முக்கியத்துவம் அளிப்பது மிருதங்க இசையே இந்த இசை தெய்வசக்தி வாய்ந்தது என்று கூறினர்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் பேசுகையில் கிராமியக் கலைக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் தமிழ் மன்றத்தினர் இந்த இசைக் கூடத்தை ஆரம்பித்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். கர்நாடக இசையும், கிராமியக் கலையும் ஒன்றையொன்று தழுவிநின்று இசைக்கலைக்கு முக்கியத்துவம் அளிக்கச்செய்வது இதுபோன்மன்றங்களின் தலையாயகடமையாகும் என்று குறிப்பிட்டார்.

திரு எஸ். இராமநாதன் திரு. சின்னராசா ஆகியோர் மாணவர்களுக்கு மிருதங் ஆரம்பப் பயிற்சியளித்தனர்.

டாக்டர்கள் கருத்துதெரிவித்துள்ளார்கள்.

## 'பாடசாலையின் பெயரை மாற்றுக'

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலையின் 2-ம் வருட பெற்றூர் ஆசிரியர் சங்கக் கூட்டம், பாடசாலையில் அதிபர் திரு. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. பொ. புண்ணியசிங்கம் பேசுகையில், இப்பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு போதிய வாங்கு மேசைகள் இல்லையென்றும் இங்கு கல்வித்தரம் மிமோசமான நிலையில் இருப்பதாகவும் கூறினர்.

திரு. த. சோமசுந்தரம் பேசுகையில், அரசாங்கம் சகல பாடசாலைகளையும் சமய அடிப்படையில் கல்வி போதிக்கத் திட்டமிட்டுள்ளதென்றும், இப்பாடசாலையில் பயிலும் மாணவர்கள் அதிகமாக சைவப்பிள்ளைகளாக இருப்பதால் சைவ முறையில் பாடசாலை இயங்கவேண்டும் என்றும் கூறினர்.

இப்பாடசாலையின் பெயரை ''நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்'' என்று மாற்றப்பட வேண்டும் என்று அவர் கொண்டுவந்த பிரேரணை திரு. த. கனகரத்தினத்தினுல் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. திருவாளர்கள் எஸ். சண்முகலிங்கம், எஸ். வைத்திலிங்கம், வி. பஞ்சரெத்தினம், சு. இராசையா, பொ. ஏரம்பு, வி. பரமநாதன் ஆகியோரும் பேசினர்.

## உலகவங்கி கோஷ்டி விரைவில் வரும்

பம்பலப்பிட்டி, சனி

ஐந்துபேரடங்கிய உலக வங்கி கோஷ்டியொன்று விரைவில்இலங்கைவரவிருக்கிறது.

இக்கோஷ்டியினர் திட்ட, பொருளாதார அமைச்சினல் தயாரிக்கப்பட்டுள்ள ஐந்து வருட அபிவிருத்தித் திட்டத்தை ஆராய்வார்கள்.

இவர்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ள 6 நாடுகளிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

வரும் மே மாதத்தில்லண்டனில் நடைபெறவிருக்கும் இந்த 6 நாடுகளின் கூட்டத்தின்போது இவர்கள் தமது அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

இலங்கையின் பொருளாதார உதவிக்கு பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகள் உதவ முன்வந்துள்ளன.

## 'ஆங்கில அறிவு போதாது'

பம்பலப்பிட்டி, சனி

'வருடாவருடம் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையிலிருந்து வெளிவரும் சுயபாஷா ஆசிரியர்கள் ஆங்கில மொழியில் எதுவத அறிவும்பெருதது மிக்க வருத்தமடையவேண்டிய ஒரு விஷயம்' என ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் கல்வித் தரம் மற்றும் விஷயங்களைபற்றி விசாரணை நடத்திவரும் விசாரணைக் கமிட்டியிடம் வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியர்கள் சங்கத்தின் கௌரவ காரியதரிசி திரு. கார்ல்டன் சமரஜீவா தெரிவித்துள்ளார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஆங்கிலம் ஒரு கட்டாயபாடமாக இருந்தும் [illegible] என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


வீட்டை நடத்திக்களைத்த அம்மாவுக்கு

# மாமைட்



பட்டிட்டுப் பொட்டிட்டுச் சிறுவர்களை பாடசாலைக்கனுப்பி



வீட்டைக் கூட்டி, ஒழுங்குபடுத்தி



மட்டற்ற சமையல் வேலைகளை நாள்தோறும் செய்து களைத்திருப்பதால்



தேக சுகத்திற்கும் தெம்பிற்கும் விசேஷமாக அம்மா அருந்துவது மாமைட்

சக்தி மிகுந்த சுகவாழ்வுக்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த உணவு மாமைட். வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சப் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம்.






[illegible]வுப் பொருள் சர்க்கரைப் பொருள் அற்ற; B விட்டமின் நிறைந்த, தூய்மையான, தாவர உணவுப் பொருள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
மது வரிப்பகுதி

என் 353— திருக்கோணமலையிலுள்ள சாராயக் குதத்திற்கும் அங்கேயுள்ள புகையிரத பண்டசாலைக்கும் இடையே சாராயமும், மற்றும் பொருட்களும் கொண்டு செல்லுதல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 1-3 66

நீர்ப்பாசனப் பகுதி

என் 237— கல்முனை உப-பிரிவில் (1) வட்டமடு அணைக்கட்டு கட்டுதல் (2) வெள்ளச்சேதத் திருத்தவேலை-சொறிக் கல்வாய் அணைக்கட்டு (3) விசேஷ துயாரிப்பு வேலைகள லகுவலை திட்டம்.

என் 223— அல்லை விஸ்தரிப்புத்திட்டத்திலுள்ள மங்களவேளர் புனரமைப்பு வேலைக்கும் அல்லை கந்தளாய் வீதியில் திருத்தவேலை செய்வதற்கும் கேள்விப்பத்திரங்கள் முடிவுதிகதி 8-3 66.

என் 237— கந்தளாய் நீர்ப்பாசனத்தின்கீழ் உள்ள வானெல குளத்திற்கு நீர் கொடுக்கும் வாய்க்கால் அமைத்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 1-3-66

இதன் முழுவிபரங்களுக்கும் 11-2-66ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, 11-ம் தொகுதியைப்பார்க்கவும், இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும் உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 1582

போயா தினத்தில்

## மேலதிக வேலைக்கு ஆட்சேப மகஜர்

பம்பலம்பிட்டி, சனி

''போயாவிடுமுறை தினங்களில் மேலதிகமாக வேலை செய்வதற்கு இடமளிப்பதால், பொது நிதி வீணாக விரயமாகிக்கொண்டு போவதற்கு வழிசெய்வதாகும். அன்றைய தினம் வேலைசெய்வது சட்டரீதியற்ற செயலாகும்'' என பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு மகாசங்க பெரமுன காரியதரிசி பீற்றிய கொட குணரத்ன தேரோ அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

''ஒரு அலுவலகத்தில் மேலதிகவேலை செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறதென்றால் அங்கே ஊழியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதுதான் அர்த்தம். ஆகையால், புதிய ஊழியர்களை வேலையைச் சமாளிப்பதற்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறைக்கப்படுவதுடன், தேசிய அரசாங்கத்துக்கும் நாட்டில் நல்ல செல்வாக்கு வளர்வதற்கு இடமளிப்பதுமாகும்'' என்று மேலும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விளையாட்டுப் பகுதி



## திருமலை மாவட்ட விளையாட்டு விழா

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை மாவட்ட விளையாட்டுவிழா, இம்மாதம் 25-ம் திகதி ஆரம்பமாகும். திருக்கோணமலை கிரிக்கெட், விளையாட்டு சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் நடைபெறும் இவ்விழா இம்மாதம் 25, 26, 27-ம் திகதிகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் திரு. நெவில் ஜயவீரா கவனித்து வருகிறார்.

இந்த விளையாட்டு விழாவில் சகல போட்டிகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட்டுக்கோட்டைக்கு மின்சாரம்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை கிராம சபை பகுதிக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கவிருக்கின்றது.

மின்சாரக் கம்பங்கள் நிறுத்தப்பட்டு மின்கம்பி இணைப்பு வேலைகள் பூர்த்தியானதும் மின்சாரம் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யக்கிரகம்

மாஸ்கோ, பெப். 12

''கொஸ்மோ 108'' என்ற பூமியைச் சுற்றி வரும் வெளிவான ஆராய்ச்சிக் கிரகம் ஒன்றை ரஷ்யா அனுப்பியிருக்கிறது.

சுன்னகத்தில்

## பிரணவானந்தஜிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மலேசியத் திவ்யஜீவனசங்கத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரணவானந்தஜியை 16-ம் திகதி சுன்னகம் திவ்யஜீவ சங்கம் வரவேற்கும். அன்று மாலை சுன்னகத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சுவாமி சொற்பொழிவாற்றுவார்.

17-ம் திகதி காலை சுவாமி பிரணவானந்தாஜி நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார்.

18-ம் திகதி நல்லூர்சட்டநாதர் கோவிலில் சொற்பொழிவாற்றுவார்.

### சாவகச்சேரியில்

சாவகச்சேரி, வெள்ளி

மலேசியத் திவ்யஜீவன சங்கத்தலைவர் ஸ்ரீ மத் சுவாமி பிரணவானந்தஜி, 13-ம் திகதி சாவகச்சேரிக்கு விஜயம் செய்வார். சாவகச்சேரி திவ்ஜஜீவன சங்கம் அவரை வரவேற்கும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சுவாமி சொற்பொழிவாற்றுவார். சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் சுவாமி வரவேற்கப்படுவார்.

## கட்ச் நீதிமன்றம்

ஜெனிவா, பெப். 12

மூவர் கொண்ட கட்ச் நீதிமன்றம் தனது முதல் கூட்டத்தை வருகிற செவ்வாய்க்கிழமை ஜெனிவாவில் நடத்தும். சுவீடிஷ் நீதிபதி இதற்குத் தலைவர்.

# தண்டனை

தமது மகளுக்குப்பராமரிப்பு பணம் செலுத்தத் தவறிய வெவல்தெனியாவைச் சேர்ந்த எம்.ஏ.சார்ளிஸ்சிங்கோவுக்குமேலதிக கம்பஹா மாஜிஸ்டிரேட் பத்து மாதம் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

○

886 கிறைன் கஞ்சாவைத் திருந்ததாக கண்டி தெய்யன்னவலையைச் சேர்ந்த எம். றஸாக் மீதுகுற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், கண்டி மாஜிஸ்டிரேட் திரு. டி. விஜயரத்ன 200 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

○

கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க ஒருசதம் கூடுதலாக (ஆறுசதம்) விலைக்கு தீப்பெட்டி விற்பனை செய்ததாக மீகஹதென்னையைச் சேர்ந்த யு.டி.டி குணசிங்கா என்பவர்மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மத்துகாமம் மாஜிஸ்டிரேட் திரு. டபிள்யு. அரசுவால்டன் எண்பதுரூபா அபராதம் விதித்துள்ளார்.

○

கோழிகளைத் திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், பசறையைச் சேர்ந்த ஏ நடராஜா என்பவருக்கும் அட்டாம் பட்டியைச் சேர்ந்த என். நல்லையா என்பவருக்கும் பதுளை மாஜிஸ்டிரேட் திரு.எம். சண்முகலிங்கம் முறையே ஆறுமாதமும் இரண்டுமாதமும் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

## தலைமை ஆசிரியர் இல்லை

மாங்குளம், வெள்ளி

வவனிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் அரசாங்கத்தினரால் நிறுவப்பட்ட 'அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தற்போது தலைமை ஆசிரியரே இல்லாது நடக்கின்றது. ஏறக்குறைய 150 பிள்ளைகளைக் கொண்டு விளங்கும் இப்பாடசாலையில் ஒரு ஆசிரியையும், 4 ஆசிரியர்களும் தற்பொழுது கடமையாற்றுகின்றனர்.

கடந்த முதலாம் திகதியுடன் முன்பு இப்பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்த திரு. க. பெரியதம்பியை மன்னார் வித்தியாதிபதி வேறு பாடசாலைக்கு மாற்றம் செய்துவிட்டதால் இன்னும் அப்பாடசாலைக்கு தலைகையாசிரியர் நியமிக்கப்படவில்லை,

## ஆஸ்பத்திரி வேண்டும்'

சுழிபுரம், சனி

தொல்புரம் பாணுவெட்டி மடத்திலுள்ள வைத்தியசாலையை ஆஸ்பத்திரி தரத்துக்கு உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். இது சம்பந்தமாக சுகாதாரப் பகுதியினருக்கு மகஜர் ஒன்று சமாப்பிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை எம் பி. திரு. அ. அமிர்தலிங்கம். பாணுவெட்டி ஆஸ்பத்திரி சம்பந்தமாக சுகாதார மந்திரியைச் சந்திக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பலாலிவீதியில் அடைவுதுண்டொன்று மறவன்புலோவைச் சேர்ந்த திரு. க. கணேசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு, 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன்நேரில் வந்துபெற்றுக்கொள்ளலாம்.

# வரிவிளம்பரம்

தண்ணீர்க் குழாய்கள் இணைக்கவும், பம்புகள்திருத்தவும், மோட்டார் றிவயிண்டிங் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்தமுறையில் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். எம்முடன் நேரடியாக அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. நாகேசு, ஜெகஜோதி தொழிற்சாலை, 41, பஸார் ஒழுங்கை, மும்ஸாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 1920

விற்பனைக்கு

சாவகச்சேரி நகர எல்லைக்குள் வீடுகட்டுவதற்கேற்ற 28 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இதனை ஒறுமித்தும் பங்கிட்டும் பெற்றுக்கொள்ளலாம். விலைவிபரங்களை திரு. சி. யோகானந்தம், 33, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதியும் நேரிற்சென்றும்ஒழுங்கு செய்யலாம். 1918

274, பருத்தித்துறை வீதி. நல்லூரில் கீழ்க் காணும் பாவித்த தளபாடங்கள் விற்பனைக்குண்டு. குறைந்தவிலை: செற்றீஸ்-10, ரேடியோ ஸ்ராண்ட். கபினெட்டுடன், ஸ்டீல் கபின் (வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.) சாய்மனைக் கதிரை, கவரிக்கடிகாரம் மற்றும் வீட்டுத் தளபாடங்கள், சாப்பாட்டு மேசை கதிரைகள். 1919

கல்வி

இலங்கையின் தரமுயர்ந்த தபால்மூலம் கல்வி ஜி.சி.ஈ. சாதாரணம்/உயர்தரம், ஜி. ஏ. கியூ./பி. ஏ. 22 ஸ்கொலசிப்புகள் வழங்கப்படும். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி/ கரவெட்டி. 1881

வெற்றி உறுதியளிக்கப்படுகிறது. எங்கள் அஞ்சல் போதனாமுறைக் கல்வி சிறந்த பயிற்சி அளிக்கிறது. பி. ஏ. பொருளாதாரம், கலை, கைப்பணி பொருட்காட்சி பற்றிய விபரங்கள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1882

பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜீ. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜீ. சி. ஈ. விஞ்ஞானம் ஆரம்ப வகுப்புகள் விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை நெல்லியடி கரவெட்டி/ 107 பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1856

தேவரையாழி இந்துக் கல்லூரி ஆலோசக ஆசிரியர் திரு. இ. செல்வத்துரை அவர்கள் 1965-ம் ஆண்டு நடந்த சைவப்புலவர் பரீட்சையில் இரண்டாம் பிரிவிற் சித்தி பெற்றுள்ளார். 1915

வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய யாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தம் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வழக்கம்பரை வெற்றி

சுழிபுரம், சனி

சுழிபுரம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கோஷ்டிக்கும் வழக்கம்பரை விளையாட்டுக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வழக்கம்பரை விளையாட்டுக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.


போன் 7213
பெட்டர் பார்மஸி
ஆங்கில மருந்துகளுக்கு
23, டாம் வீதி, கொழும்பு. 12



உஷாயர் கிறீக்கோ!! நூற்றுக்குநூறு சுத்தமான
உஷாயர் கிறீக்கோ கோப்பி
ஜோன் கிறீன் கம்பெனியாரால் உத்தரவாதத்துடன் தயாரிக்கப்பட்டது
நிறம் மணம் குணம் நிறைந்தது
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
தினமும் உல்லாசமாய் அருந்துங்கள்
ஜோன் கிறீன் அன் கோ,
86, வோல்ஸ் லேன், முகத்துவாரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெலிபோன் ஒற்றுக்கேட்டலை ஆராய ஒருவர் கமிஷன்

## திரு. அபயவர்த்தன நியமனம்

பம்பலப்பிட்டி, சனி

1960-ம் ஆண்டு ஜனவரி முதல் திகதி முதல் 1965-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி வரை தொலைபேசிகள் சட்டவிரோதமாக ஒற்றுக் கேட்கப்பட்டதா என்பதை ஆராய திரு. ஸி. பி. அபயவர்த்தனவைக் கொண்ட ஒருவர் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது.

மே 31-ம் திகதிக்கு முன் திரு. அபயவர்த்தன தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

இவ்வித ஒற்றுக்கேட்டலுக்கு அரசாங்க சாதனங்கள் எவ்வகையில் பயன்படுத்தப்பட்டன என்பதையும், எந்த வழிகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டன என்பதையும் மற்றும் பல விபரங்களையும் ஒருவர் கமிஷன் விசாரணை செய்து ஆராயும்.

பொதுமக்கள், அல்லது அரசாங்க ஊழியர்களின் ஒத்துழைப்புடன் ஒற்றுக்கேட்டல் இடம்பெற்றதா என்பதும் ஆராயப்படும்.

REGAL—JAFFNA
NOW SHOWING
INGRID BERGMA'N
ALAIN DELON
in
THE YELLOW ROLL ROYCE
(Panavision-Metro Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
பானுமதி - ராஜன்
நடித்த
அன்னை

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
ஆலய மணி
தினசரி 4-15க்கு மட்டும்
த ரெறர்
வயது வந்தவர்களுக்கு மட்டும்

## ஆஸதிரேலியா 2 விக்: 101 ரன்

மெல்போன், பெப். 12

ஆஸ்திரேலியாவுக்கும்இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெறும் 5-வது கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 2 விக்கட் நஷ்டத்திற்கு 101 ரன்கள் எடுத்தது.

இங்கிலாந்து 9 விக்கெட் நஷ்டத்திற்கு 485 ரன்கள் எடுத்து தன் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

## சென்னையில் சாஸதிரி சிலை

சென்னை, பெப். 12

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில், காலஞ்சென்ற திரு. சாஸ்திரிக்கு உருவச்சிலை அமைக்கப்படவிருக்கிறது. சென்னை கார்ப்பரேஷன் கமிட்டி இந்த முடிவைச் செய்துள்ளது.

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நாரனே) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்தியா (கம்பளை)



பூம்புகார்
எஸ். எஸ். ஆர் — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
ஜெமினி, சிவாஜி, சாவித்திரி
நடிக்க
பதி பக்தி

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பற்ற சுயநலப் பேர்வழிகள், அடுத்த ஜன்மத்தில் ஏழ்மையால் உணவுமின்றிச் சங்கடப்படலாம். ஆகவே மறுஜன்ம சுயநலத்தை முன்னிட்டாயினும், கர்மவினை பேசுபவர்கள், பிறஉயிர்களிடம் அன்புகாட்ட வேண்டாமா?

தாங்களாக மாறினால் நல்லது. இல்லாவிட்டால் இன்றைய உலகம் பொறுக்காது. பலாத்கார புரட்சிகள் பயமுறுத்துவதை யாரும் அலட்சியம் செய்ய முடியுமா?

ஃ ஃ ஃ

திருமுறைகள் முதலிய அரிய தமிழ்ச் செல்வங்களை சிங்களத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்று துணிச்சலான ஒரு யோசனையை, சைவப்பெரியார் ஞானப்பிரகாசம் அவர்கள் சென்ற வெள்ளியன்று வண்ணை சிவன் கோவிலில் நடைபெற்ற கதாபிரசங்க அரங்கேற்ற விழாவில் சொன்னார். இப்போது சைவத்தை தமிழ் மொழிக்குள் அடைத்து வைத்து, அது தமிழருக்கு மட்டுமே ஏகபோக உரிமை என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் பரவவேண்டுமென்று கோஷம் செய்பவர், சைவச் செல்வங்களை உலக மொழிகளிலும் தந்து, உலகுக்கே பொதுவுடமையாக்க வேண்டாமா? திருவாசகத்தை ஆங்கிலத்தில் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் ஆக்கியபோது, அதைச் சிங்களத்தில் ஏன் ஆக்கக் கூடாது? மொழிபெயர்ப்பு மிகக் கஷ்டம் தான். என்றாலும் சிங்களவர்களுக்குச் சைவத்திலுள்ள அரும்பெரும் விஷயங்கள் தெரிந்தால் தமிழர்மீது அவர்களுக்கு மதிப்பு மிக உயரும். இவ்வித அன்புப்பணி மூலம்தான் இங்கு சமூகத் தப்பெண்ணங்களை நீக்கி ஒற்றுமை ஏற்படுத்தமுடியும்.

ஃ ஃ ஃ

வித்வான் சண்முகரத்னத்தாரின் கதாப்பிரசங்க அரங்கேற்ற விழாவில்தான் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியரான ஞானப்பிரகாசர் இவ்விதம் கூறியது: சாரீர சம்பத்தும், சரீர சம்பத்தும் வாய்ந்த வித்வான் அவர்கள் மாணிக்கவாசகரைப் பற்றிச் சங்கீதகதாப் பிரசங்கம்செய்து பல பெரியோர்களின் ஆசியையும் பாராட்டுதலையும் பெற்றார். வித்வான் அவர்கள் சபைக் கூச்சமின்றி மூன்றரைமணி நேரத்துக்குமேல் செய்த இக்காலட்சேபம் மிக இனிமையாகவும் வெற்றிகரமாகவும் அமைந்தது.

ஃ ஃ ஃ

இருள்தரு துன்பப் படலமறைப்ப மெஞ்ஞான மென்னும், பொருள்தரு கண்ணிழந்துள் பொருள்நாடிப் புகவிழந்த, குருடருந்தம்மைப் பரவக் கொடுநரகக்குழி நின், றருள்தருகை கொடுத்தேற்றும் ஐயாறன் அடித்தலமே.

—அப்பர் சுவாமிகள்

### 185 எம். பி.க்கள் மகஜர்

## 1969-ல் பூரண மதுவிலக்கு தேவை

புதுடில்லி, பெப் 12

மகாத்மாகாந்தியின் நூற்றாண்டு வருடமான 1969-ல் இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் எனக்கோரி 185 எம். பி.க்கள் பிரதமருக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார்கள். திரு. மொரார்ஜி தேசாய், திரு. ஜெகஜீவன் ராம், டாக்டர் சுசீலா நய்யார் ஆகியோர் இவர்களில் சிலர்.

# தமிழ் சட்டவிதிகள்

## ராஜாங்க மந்திரி தரும் விளக்கம்

பம்பலப்பிட்டி, சனி

இப்பொழுது அமுலிலிருக்கும் தமிழ்மொழி (விசேஷ) சட்டவிதிகள் மசோதா சம்பந்தமாக மக்களிடையே எழும்பும் சில ஐயங்களைத் தீர்த்துவைக்க உதவும்வகையில் ஒலிபரப்பு, தகவல்பகுதியினர் ஓர் அறிக்கைவிடுத்துள்ளனர் இந்த அறிக்கை கேள்விகளையும் விடைகளையும் கொண்டுள்ளது. கேள்விகளுக்கான விடைகளை ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அளித்திருக்கிறார்.

சில கேள்விகளும் விடைகளும் வருமாறு:—

கேள்வி: தமிழ்மொழி (விசேஷ) சட்டம், நாட்டின் மற்றைய (தெற்கு, மேற்கு) பகுதிகளிலுள்ள மக்களுக்கும் சலுகை அளிக்கிறதா?

பதில்: தமிழ்மொழி (விசேஷ) சட்டம் இங்கும் அமுல் செய்யப்படாதவரை இல்லை.

கேள்வி: தமிழர் ஒருவர் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொண்டால், அவருக்குரிய பதில் உத்தியோக மொழியிலும் அதன் மொழிபெயர்ப்பு தமிழிலும் கிடைக்க இப்பொழுது வசதி இருக்கிறது. இந்த வசதியுடன் ஏன் தமிழர்களுக்கு மட்டும் இருமாகாணங்களில் வேறு சலுகை அளிக்கவேண்டும்?

பதில்: இந்த நாடு பூராவிலும் சிங்களவருக்கு இருக்கும் சலுகைகள் போல வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழருக்கு சலுகைகள் கிடையாது.

கேள்வி: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் தமிழில் நடைபெறுவதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க சேவையிலோ, ஸ்தலஸ்தாபன சேவையிலோ அல்லது தனியார் துறையிலோ வேலை பெறுவதற்கு சிங்களவர்கள் தமிழ்பயில வேண்டுமா?

பதில்: நிர்வாகம் தமிழில் மட்டும் நடைபெறாது

கேள்வி: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரே அதிகம். பொதுமக்கள் தமிழில் தொடர்பு கொள்வதால் சகல தஸ்தாவேஜுகளும் தமிழ் மொழியிலேயே வைக்கப்படும். இக் கட்டத்தில் சிங்களத்தில் எவ்விதத்தில் தஸ்தாவேஜுகள் மனுக்கள் வைக்கமுடியும்?

பதில்: தொடர்பு கொள்ளும் மொழியிலேயே அதன் மனுவும் வைக்கப்படும். ஆனால், தஸ்தாவேஜுகள் பின்னர் இருமொழிகளிலும் இருக்கும்.

கேள்வி: வடக்கு, கிழக்கில் சிங்களவர் வேலைவாய்ப்பு பெறமுடியுமா?

பதில்: ஆம்.

கேள்வி. சிங்கள ஆசிரியர், யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்பு பெறமுடியுமா?

பதில்: ஆம்.

கேள்வி: வடக்கு மாகாணத்திலுள்ள சுன்னாகத்திலிருக்கும் செல்வி மல்லிகா, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்ய விரும்புகிறார். அவர் எந்த மொழியில் முறைப்பாடு பதியவேண்டும்?

பதில்: சிங்களத்தில்.

கேள்வி: அவரது முறைப்பாட்டைப் பதிவதற்கு சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற ஒருவர் அங்கு இருப்பாரா?

பதில்: ஆம்.

கேள்வி: கிழக்குமாகாணத்திலுள்ள கல்லடி என்னும் இடத்தில் வசிக்கும் ஐஸ்டின் பெரேரா என்பவர், தனது ஆலைக்கு மின்சாரம்பெற விரும்புகிறார். அங்குள்ள ஸ்தலஸ்தாபனசபைக்கு அவர் இதுபற்றிசிங்களத்தில்எழுதுகிறார். அவரதுகடிதம்ஏற்றுக் கொள்ளப்பட்டு அவருக்குரிய பதில் சிங்களத்தில் கிடைக்குமா?

பதில்: ஆம்.

கேள்வி: வடக்கு கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் அக்மன்சிங்ஹேற என்பவர் தமது குழந்தையைப் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றார். அவர் எந்த மொழியில் படிவம் நிரப்ப வேண்டும்? எந்த மொழியில் அவரது குழந்தை பதிவு செய்யப்படும்? எந்த மொழியில் அவருக்குக் குழந்தையின் பிறப்புப் பத்திரம் கிடைக்கும்?

பதில்: சிங்களத்தில்.

கேள்வி: அரசாங்கப்பகுதிகளிடையேயான தொடர்பு மொழி எதுவாக இருக்கும்?

பதில்: சிங்களம்.

கேள்வி: ஸ்தலஸ்தாபன சபை எந்த மொழியில் நிர்வாகம் நடத்தவேண்டும்?

பதில்: அது அந்த ஸ்தலஸ்தாபனசபையை பொறுத்தது.

கேள்வி: ஒரு ஸ்தலஸ்தாபனசபையில் குறைந்த அளவு சிங்களப் பிரதிநிதிகள் இருந்தால் அவர்கள் எந்த மொழியில் அலுவல்களைக் கவனிக்கவேண்டும்?

பதில்: சிங்களத்தில்.

கேள்வி: உண்மையான மசோதாவை மாற்றக்கூடிய தகுதி அதிகாரம் விதிகளுக்கு அல்லது பிரமாணங்களுக்கு இருக்குமா?

பதில்: இல்லை.

### ஜி ஜிக்கு . , .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களும் பிரமுகர்களும் கட்சிப்பற்றின்றி, மாலைகள் சூட்டி, உற்சாகமாக வரவேற்றனர். விமானநிலையத்திலிருந்து திரு. பொன்னம்பலம் மோட்டார் கார் பவனியாக திருக்கோணமலை நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

முற்பகல் பதினொரு மணிக்கு திரு. பொன்னம்பலம் திருக்கோணேசர் ஆலயத்துக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

### சோஷலிச . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் ஒத்துழைப்புத் தேவையாகும். சிறுசிறு பூசல்களைச் சாதிக்காது நாட்டின் ஐக்கியத்துக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடவேண்டியது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும்.

பொதுக் கூட்டத்தில் உணவு நெருக்கடிபற்றி ஆராயப்பட்டதுடன் காரியக்கமிட்டி அதுசம்பந்தமாக இயற்றிய தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிலவுரிமை சம்பந்தப்பட்ட பிரச்னையும் ஆராயப்பட்டது.

### தேவை

எமது கூட்டுறவு சங்கத்தின்கீழ் இயங்கும் A. B. பண்டகசாலைகளுக்கு இரண்டு மனேச்சர்கள் தேவை. ஆங்கிலம் அல்லது தமிழ் எஸ். எஸ். சி. தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவராயும், 22--35 வயதுக்கு மிடைப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். சம்பளம்: 100—150. எல்லாப் படிகளும் உட்பட. விண்ணப்ப முடிவு: 15-2-66 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு. தகைமைகள் சரியென சங்க முகாமையாளர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டால். ரொக்கப் பிணை 1000/-. ஆதனப் பிணை 2000/- கட்டி பண்டகசாலையை பொறுப்பேற்கலாம். இங்ஙனம். ஆ. இராசதுரை, காரியதரிசி, இராமநாதபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

1908

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org